செ.வெ.எண். 09 நாள்: 03.02.2017

**தமிழக அரசின் வழிகாட்டுதலின்படி தட்டம்மை–ரூபெல்லா தடுப்பூசி சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

தமிழக அரசின் வழிகாட்டுதலின்படி, தட்டம்மை–ரூபெல்லா நோயினை முற்றிலும் ஒழிப்பதற்காக 2017 பிப்ரவரி 6 முதல் 28ம் தேதி வரை தட்டம்மை–ரூபெல்லா தடுப்பூசி சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளது.

தட்டம்மை–ரூபெல்லா தடுப்பூசி சிறப்பு முகாமில் 9 மாதம் நிறைவடைந்த குழந்தைகள் முதல் 15 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் ஏற்கனவே தடுப்பூசி போட்டிருந்தாலும் கூடுதலாக ஒரு தவணை தட்டம்மை–ரூபெல்லா தடுப்பூசி வழங்கப்படும். ஒரே சமயத்தில் தட்டம்மை–ரூபெல்லா தடுப்பூசியினை அனைத்து குழந்தைகளுக்கும் வழங்குவதால் நோயிலிருந்து பாதுகாப்பு கிடைப்பதோடு நோய் பரவுவதையும் தடுக்க முடியும்.

தட்டம்மை–ரூபெல்லா தடுப்பூசி முகாம்கள் அனைத்து பள்ளிகள், அங்கன்வாடி மையங்களில் நடத்தப்படுகிறது.

தட்டம்மை–ரூபெல்லா தடுப்பூசி மிகவும் பாதுகாப்பானது. தட்டம்மை மற்றும் ரூபெல்லா நோயிலிருந்து குழந்தைகளை பாதுகாக்க தடுப்பூசி வழங்குவது மட்டுமே சரியான தீர்வாகும். ஒரே தடுப்பூசியில் இரண்டு உயிர் கொல்லி நோய்களான தட்டம்மை மற்றும் ரூபெல்லாவிலிருந்து வாழ்நாள் முழுவதும் பாதுகாப்பு கிடைக்கிறது. குழந்தைகள் பிறவிக் குறைபாடுகளுடன் பிறப்பதைத் தடுக்கிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 2280 பள்ளிகள் மற்றும் 1336 அங்கன்வாடி மையங்களில் தட்டம்மை–ரூபெல்லா தடுப்பூசி முகாம் காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நடைபெறவுள்ளது. இதன் மூலம் மொத்தம் 16.3 இலட்சம் குழந்தைகள் பயனடையவுள்ளனர்.

சிறப்பு முகாம் முதல் இரண்டு வாரத்தில் அனைத்து பள்ளிகளிலும், மூன்றாம் வாரத்தில் அங்கன்வாடி மையங்கள் மற்றும் பள்ளிக்கு செல்லாத குழந்தைகளுக்கு அவர்கள் வசிக்கும் பகுதிகளில் உள்ள தடுப்பூசி மையங்களிலும் நடைபெறவுள்ளது. இறுதியாக நான்காவது வாரத்தில் தட்டம்மை–ரூபெல்லா தடுப்பூசி விடுபட்ட குழந்தைகளுக்கு வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த அரிய வாய்ப்பினை பெற்றோர்கள் அனைவரும் தங்கள் 9 மாதம் நிறைவடைந்த குழந்தைகள் முதல் 15 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் தட்டம்மை–ரூபெல்லா தடுப்பூசியை போட்டுக்கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு: துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி.